ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,695—1966 මැයි 13 වැනි සිකුරාදා—1966.5.13

14,695 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு மே மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]

	பக்கம்		பக்கம்
உள்ளூராட்சி அறிவிப்புகள்	89	வரவு செலவுக் கூற்றுக்கள்	—
பதவிகள்—வெற்றிடம்	91	வரவு செலவுத் திட்டங்கள்	—
பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் ..	94	ஆதன விற்பனைகள்	—
துணை விதிகள்	94	விதிச் செய்ற்குழுவின் அறிவித்தல்கள்	—
உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்	95	நானாவித அறிவித்தல்கள்	—

உள்ளூர் ஆட்சி அறிவிப்புகள்

ඇල්. ඩී.-ඩී. 74/39
ඊ. 10/1/2/1

கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ஆம் பிரிவின் கீழ் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரப்படி, உள்ளூர் ஆட்சி அமைச்சரால் பிறப்பிக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூர் ஆட்சி அமைச்சர்.

கொழும்பு,
1966 ம் ௵ எப்பிரில் ௴ 24 ந் உ.

கட்டளை

1964 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட **14,174** ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளில் குறிக்கப்பட்ட கொழும்பு மாவட்டத்துச் சியன கோறளை கிழக்குப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள புதிய கொரகல, கிராமப் பிரதேசத்தை அமைப்பதற்கும், தொம்பே, வேக்க, மாப்பிற்றிகம கிராமப் பிரதேசங்களில் மாற்றம் உண்டாக்கித் திரும்ப வரையறை செய்யும் அலுவலைச் செயல் முறைப்படுத்துவதற்கும் வேண்டிய விடயங்களுக்கு இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள முறையில், இத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும், கிராமச் சபை, அப்புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்படக்கூடிய கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் தானத்தைப் பெற்றுக்கொள்ளும்.

2. (1) 1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதியில் நடைமுறையில் உள்ளனவும் தொம்பே, வேக்க, மாப்பிட்டிக்கம ஆகிய பழைய கிராமச் சபைகளால் ஆக்கப்பட்டவையுமான துணை விதிகள் யாவும், இத்துணை விதிகள் இப்புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றிற்கும் சம்பந்தம் உடைய அளவிற்கு முறையே தொம்பே, மாப்பிட்டிக்கம, வேக்கே, பூகொடை ஆகிய கிராமப் பிரதேசங்களில் தொடர்ந்து நடைமுறையிலிருப்பதோடு அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைகளால் ஆக்கப்பட்டனவாகவும் கருதப்படும்.

(2) 1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதியில், நடைமுறையில் உள்ளனவும் தொம்பே பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டனவுமான துணைதிவிகள், புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்பட்ட அளவிற்கு, தொடர்ந்து கொரகெல புதிய கிராமப் பிரதேசத்தில் நடைமுறையில் இருப்பதோடு அப்புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டனவாகவும் கருதப்படும்.

3. 1965 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 31 ஆம் திகதியில், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைகளின் பொது நிதியின் வரவிலுள்ள தொகை, 1965 ஆம் ஆண்டு, பெப்புருவரி மாதம் 1 ஆம் திகதியில், புதிய கிராமப் பிரதேசக் கிராமச் சபை ஒவ்வொன்றினதும் பொது நிதியின் வரவில், பின்வரும் முறையில் சேர்க்கப்படும் :—

(1) வேக்கே, தொம்பே ஆகிய பழைய கிராமப் பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு கிராமச் சபையின் பொது நிதியின் வரவிலுள்ள தொர்கையில் நான்கில் ஒரு வீதம், புதிய கொரகெல கிராமப் பிரதேசத்தின் கிராமச் சங்கத்தின் பொது நிதியின் வரவில் சேர்க்கப்படும்.

(2) பழைய மாபிற்றிகம, தொம்பே கிராமப் பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு கிராமச்சபையின் பொதுநிதியின் வரவுத்தொகையில் நான்கில் ஒன்று புதிய பூகொடை கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையின் பொது நிதியின் வரவில் சேர்க்கப்படும்.

முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ௵ பெப்புருவரி ௴ 11 ந் உ.

பேர்னட் டி சில்வா,
அரசாங்க அழுத்தகன.

(3) பழைய வேக்கே கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையின் பொது நிதியின் வரவிலுள்ள மீதி நான்கில் மூன்று பாகம் புதிய வேக்கே கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையின் பொது நிதியின் வரவில் சேர்க்கப்படும்.

(4) பழைய மாப்பிற்றிக்கம கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியின் வரவில் மீதியாகவுள்ள நாலில் மூன்று பாகத் தொகையும், பழைய தொம்பே கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியில் வரவிலுள்ள அரைவாசித் தொகையும், புதிய தொம்பே-மாப்பிற்றிகம கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையின் பொது நிதியில் வரவில் சேர்க்கப்படும்.

4. 1965 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 31 ஆம் திகதியில், பழைய கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபைக்கு உரித்துடையதான அல்லது அதன் கட்டுப்பாட்டுள் இருந்ததான அசைவுள்ள சொத்து, 1965 ஆம் ஆண்டு, பெப்புருவரி மாதம் 1 ஆம் திகதியில், பின்வரும் முறையில் புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச் சபைக்கு உரித்துடையதாக்கப்பட்டதெனக் கருதப்படும் :—

(அ) பழைய மாபிற்றிகம கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபைக் குரித்தான பின்வரும் அசைவுள்ள சொத்து, புதிய பூகொட கிராமப் பிரதேசத்தின் கிராமச் சங்கத்திற்கு உரித்தாக்கப் படும் :—

20 கைபிடிக் கதிரைகள்
4 எழுத்து மேசைகள்
1 தட்டெழுத்து மேசை
1 இரட்டைப் பிரதியெடுக்கும் பொறிவைக்கும் மேசை
1 நீண்ட வாங்கு
1 அலுமாரி
1 கட்டுக்கோப்பு அலுமாரி
1 சுவர்க் கடிகாரம்
1 தட்டெழுத்துப் பொறி (சிங்களம்)
1 தட்டெழுத்துப் பொறி (தமிழ்)
1 ரோனியோ இரட்டைப் பிரதியெடுக்கும் பொறி
3 இரப்பர் இலாஞ்சனை
1 துளையிடும் பொறி
1 மை இதழ்க்கட்டு
1 கட்டுக்கோப்பு ராக்கை
1 மொனரே சைக்கிள் (வா 744)
6 தட்டுகள்
6 மரக் கதிரைகள்
2 பெரிய தூரிகைகள்
4 பளிங்குக் காகிதப் பாரங்கள்
3 அலவாங்குகள்
2 சாதாரண ராக்கைகள்
1 கோடரி
1 பெரிய கத்தி
3 தள்ளு வண்டிகள்
7 மண்வெட்டிகள்
1 கத்தி
1 சட்டைக் கடிகாரம்
1 14 றத்தல் ஆமார் (குளுகெட்)
4 துளை கருவிகள்
2 குத்தாலி
3 தாச்சு
1 குப்பைவிருண்டி
1 66″ அளவு நாடா
1 தோட்டி வண்டி
4 10″ வாளிகள் (நாகம் பூசிய)
1 12″ வாளிகள் (நாகம் பூசிய)

(ஆ) பழைய மாப்பிற்றிக்கம கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தான பின்வரும் அசைவுள்ள சொத்து, புதிய தொம்பே-மாபிற்றிகம கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குச் சாட்டுதல் செய்யப்படும் :—

10 கைபிடிக் கதிரைகள்
1 எழுத்து மேசை
4 மரக் கதிரைகள்
1 பிரசவ சிகிச்சைக்குரிய ஓர் படுக்கை
1 அலுமாரி
1 அலவாங்கு
2 மேசை (பலா)
2 கதிரை (பலா)
1 அலுமாரி (பலா)
1 வாங்கு (லுனுமிடெல்ல)

(இ) பழைய தொம்பே கிராமப் பிரதேசத்துக் சபையின் அசைவுள்ள சொத்து, புதிய கெரகல கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படும் :—

11 கைபிடிக் கதிரைகள்
11 சாதாரண கதிரைகள் (கையில்லா)
2 சாதாரண மேசைகள்
2 தட்டுகள்
1 அலுமாரி

5. 1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதியில், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தான, அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணி, கட்டடம் அல்லது அசைவற்ற சொத்து, 1965 ஆம் ஆண்டு, பெப்புருவரி மாதம் 1 ஆம் திகதியில், இருந்து, அந்தக் காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து அமைந்துள்ள புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டதாகக் கருதப்படும்.

6. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் உரிமைகள் கடன்கள், பொறுப்புகள், கடப்பாடுகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றிற்கும் அவை சம்பந்தமுடையனவாயிருக்கும் அளவிற்கு, 1965 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து, அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குச் சாட்டுதல் செய்யப்பட்டனவாகக் கருதப்படும்.

7. அதன் முன்னுள், இன்னுள் ஊழியர்களுக்கு, உபகாரச் சம்பளம் கொடுப்பதற்குப் பணம் உதவும் விடயத்தில், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குரிய பொறுப்புகள் பின்வருமாறு பகிரப்படும் :—

(அ) பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளால் இப்பொழுது கொடுக்கப்படும் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு, புதிய கெரகெல, பூகொட வேக்கே, தொம்பே-மாபிற்றிகம கிராமச் சபைகளுக்கிடையே 2 : 2 : 3 : 3 வீதத்தில் ;

(ஆ) பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளில் சேவை செய்த பின்னர் வெளியே மாற்றப்பட்டிருக்கும் ஊழியர்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய கெரகெல, பூகொட, வேக்கே, தொம்பே-மாபிற்றிகம கிராமச் சபைகளுக்கிடையே 2 : 2 : 3 : 3 வீதத்தில் ;

(இ) பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளில் இப்பொழுது சேவை செய்யும் ஊழியர்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய கெரகெல, பூகொட, வேக்கே, தொம்பே-மாபிற்றிகம கிராமச் சபைகளுக்கிடையே 2 : 2 : 3 : 3 வீதத்தில்.

8. பழைய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளிலுள்ள கந்தோர்களில் வைத்திருக்கப்பட்ட கோப்புகள், பத்திரங்கள், சாதனங்கள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றிற்கும், அவை சம்பந்தமுடையனவாயிருக்கும் அளவிற்கு 1965 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து அந்தப் புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளின் கந்தோர்களுக்கு மாற்றப்பட்டனவாகக் கருதப்படும்.

9. இந்த அட்டவணையில் :—

“ புதிய கிராமப் பிரதேசம் ” என்பது வேறு விதம் சொல்லப்பட்டாலன்றி, 1964 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதியில் வெளியிடப்பட்ட 14,174 ஆம் இலக்கம் கொண்ட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளில் வரையறுக்கப்பட்டு, திரும்ப மாற்றியமைக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தொம்பே-மாபிற்றிகம, பூகொட, கெரகெல அல்லது வேக்கே கிராமப் பிரதேசத்தைக் குறிக்கும்.

“ பழைய கிராமப் பிரதேசம் ” என்பது 1965 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 1 ஆம் திகதிக்கு முன்னிருந்த தொம்பே-மாபிற்றிக்கம அல்லது வேக்கே கிராமப் பிரதேசத்தைக் குறிக்கும்.

5-388—13.5.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,695

அறிவித்தல்

உள்ளூர் ஆட்சி (நிர்வாகப் பிரதேசங்கள்) கட்டளைச் சட்டம் அத்தியாயம் 265

இத்தால் அறிவிக்கப்படுவதாவது, இலங்கைப் பரிபாலன சேவையின் V ஆம் வகுப்பு I ஆம் தரத்தைச் சேர்ந்த திரு. டவுள்யூ. கே. எ. பீ. பீ. அபயசிங்கி அவர்கள், 1966 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி முதல், காலியில், தென்பிரதேசத்திற்குப் (மேற்பகுதி) பொறுப்பாக, உள்ளூர் ஆட்சி உதவி அதிகாரி பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

டவுள்யூ. ஜே. பொன்னுந்து,
உள்ளூர் ஆட்சி அதிகாரி.

கொழும்பு,
ஏப்ரல் 30, 1966.

5-320—13.5.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,695

பதவிகள்—வெற்றிடம்

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

1. **படிகள்.**—வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி வீட்டுவாடகைப்படி, தற்காலிக வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிக விசேட வாழ்க்கைப்படி ஆகியவை அரசாங்க விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கொடுக்கப்படற்பாலன.

2. **சேவை நிபந்தனைகள்.**—உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் (அதிகாரம் 264) ஏற்பாடுகளுக்கும், அவற்றினது திருத்தங்கள் எதனிற்கும், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களுக்கும், காலத்துக்குக் காலம் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்படும் மற்றைய சேவை நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாய் நியமனங்கள் அமையும்.

3. **வேலைக்கமர்த்தப்படுவதற்கான நியதிகள்.**—1952 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 8 ஆம் திகதி வெளியான 10,432 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 4 ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்ட பதவிகளும் அவற்றோடு காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றிச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின்கீழ் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரியனவாகும்.

(அ) அரசாங்கத்தின்கீழ் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள், இளைப்பாற்றிச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 ஆம் பிரிவின்கீழ் விடுதலை செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சேவையின் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு மாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றிச் சம்பள உரிமைகள் பாதுகாத்துக் கொடுக்கப்படும்.

(ஆ) உள்ளூராட்சித் தாபனங்களில், அவற்றின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும்போது கொடுக்கப்படும் இளைப்பாற்றிச் சம்பளம், 1949 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைத் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்டவாறுள்ள 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கிணங்க, உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(இ) இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் 1952 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வெளியான 10,329 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச சம்பள நிதிப் பிரமாணங்களின்படி தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிக்குத் தங்கள் சம்பளத்தில் 4 சத விகிதத்தைச் செலுத்தவேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஈ) நியமிக்கப்படுபவர்கள், குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு உரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறி கொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(உ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை விடயமாக முறையான தகைமைபெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(ஊ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம், பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் அல்லது அதற்கப்பால் உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டதாக அமையும்.

(எ) விண்ணப்பிப்பவர்கள் தங்கள் வயதுக்கத்தாட்சியாக தமது பிறப்புப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். சத்தியக் கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்ப் பிரதிகள் சேர்த்து அனுப்பப்படாவிட்டால விண்ணப்பிப்பவர்கள் அருகதையற்றவர்களாகக் கருதப்படுவர்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) எப்பதவிக்கேனும் நீடிய காலம் விதிக்கப்பட்டாலன்றி. காரியத்துக்கேற்ப, இளைப்பாற்றிச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றிச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் “புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்”களின் தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த காலம் இரண்டு ஆண்டுகளாயிருக்கும்.

(ii) “புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்” அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துதற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்குமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகள் எதற்கும் அமைந்தொழுகுமாறு வேண்டப்படுவர்.

(iii) (அ) இந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை, பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியெய்துவதைப் பொறுத்ததாயிருக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியடையத்தவறினால் வேதனப் பெருக்கு இடைநிறுத்தப்படும். குறிப்பிட்ட காலவரையறையையும் கடந்த நீடித்த காலவரையுள் சித்தியடையத் தவறினால், வேதனப் பெருக்கின் இடைநிறுத்தம் பூரணமாகவே நிறுத்தப்பட்டதாகிவிடும் பரீட்சை சித்தியடையும் காலம்வரை இப்பூரண நிறுத்துகை செயற்படும். (13,387 இலக்கத்தையும், 9.11.62 தேதியையும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை உத்தியோக கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்).

(இ) கல்வியும் ஏனைய தகைமைகளும்

சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக்குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லா சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற சிங்களப் பரீட்சார்த்தி, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான பரீட்சையில், சிங்கள மொழியில் அல்லது அதற்குச் சமமானதில், சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ந் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையில் உள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெற விரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

(ஈ) வினைத்திறமைகாண் தடைகள்

புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்களுக்குள், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில், சிங்கள மொழியில் விதிக்கப்பட்ட வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டியிருக்கும். சித்தியடையத் தவறினால் உத்தியோகத்தரின் வேதனப் பெருக்கம் முதலில் இடைநிறுத்தப்படும். இரண்டாவதாக, நிறுத்தப்படும், அதன்பின் பின்போடப்படும்.

(iv) சிங்கள மொழிமூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் நடக்கும் தேர்ச்சிகாண் பரீட்சையிலிருந்து தவிர்த்துவிடப்படுவர்.

(v) தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த கால முடிவில், சிங்களத்தில், விதித்த தேர்ச்சிகாண் தரத்தை எய்தமுடியாவிட்டால், உள்ளூராட்சிச் சேவை நிபந்தனைகள் 21 னதும் 22 னதும் ஏற்பாடுகள் பொருத்தமாகும்.

“(மேற்சொன்ன (iii) (அ), (ஆ) (iv) ஆகியவை, தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்க்கப்பட்டவர்களுக்கே பொருத்தமாகும்)”.

குறிப்பு.—இதில் “புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்” என்பது 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் எனப் பொருள்படுகின்றது.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதையும் திருப்திகரமாக நிரூபிக்கவேண்டும். உள்ளூராட்சிச் சேவைக்கு ஆட்சேர்த்தல் பற்றிய சகல தேவைகட்கும் "இலங்கையர்" என்னும் பதத்திற்கு வம்சாவழியில் அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரசையாகவுள்ளவர் என்று வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை:

(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக்கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, கிரமமான படையில் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவைசெய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிக்குமுரிய புதிய நியமனத்திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக்குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக்குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. **வயதுச் சலுகை.**—உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள், எவ் வயதினராயிருந்தாலும், விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு அருகதையுடையோராவர்.

8. **வேண்டற்பால ஏனையவை.**—(i) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகர சங்க அதிகாரி அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள், அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன்பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

(iv) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுக்கப்படுதற்கு எவ்விதமான முயற்சியும் செய்தலேனும் அவ் வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(v) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிக்குமுன்னர் காணப்படின் விண்ணப்பதாருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

(vi) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகலவகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vii) கீழே தந்துள்ள முறையில் விண்ணப்பங்களை எழுதி உள்ளூராட்சிச் சேவை அதிகார சபைத் தலைவர் என்று விலாசமிடுதல் வேண்டும். அவருடைய பெயருக்கு அவற்றை அனுப்பலாகாது.

(viii) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணாமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

உள்ளூராட்சிச் சேவை

முக்கியமாக கவனிக்க.—(i) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை, தபாற் பெட்டி 530, கொழும்பு 1** என்ற விலாசத்தை அடையும்வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை தலைவரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(ii) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைச் சித்தஞ்செய்யுமுன்னர் மேற்போந்த பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(iii) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும்:—(1) பிறப்புச் சான்றிதழ், (2) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (3) குணச் சான்றிதழ், (4) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(iv) விண்ணப்பக்காரர் மேற்போந்த பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

........................(........) பதவிக்கான விண்ணப்பம்.

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி : ————.
   (ஆ) .... பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ————.
   தேசிய இனம் : ————.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா இலங்கையரல்லாதாரா என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக).

தபால் விலாசம் : ————.
(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியில் சரியான வயது : ————.
   ....வருடங்கள் ....மாதங்கள்......நாட்கள்
   (ஆ) பிறந்த திகதி : ————.

5. பிறந்த இடம் :
   (அ) விண்ணப்பக்காரர் : ————.
   (ஆ) அவரது பிதா : ————.
   (இ) அவரது பிதாவழிப் பேரன் : ————.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ————.
   (விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா, தனியாளா, தாரமிழந்தவரா அல்லது கைம்பெண்ணா ? : ————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் : ————.

பொதுக் கல்வி			உயர் தொழிற்/தொழில்நுட்பக் கல்வி		
பாடசாலை அல்லது கல்லூரி	சேர்ந்த திகதி	விட்ட திகதி	தாபனம்	சேர்ந்த திகதி	விட்ட திகதி
1.	....	....	1.	....	....
2.	....	....	2.	....	....
3.	....	....	3.	....	....
4.	....	....	4.	....	....
5.	....	....	5.	....	....

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் : ————.

(அ) சிங்களம் : ————.

(ஆ) ஆங்கிலம் : ————.

(இ) தமிழ் : ————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில்நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக : ————.

10. கல்வி பயின்ற பாடசாலையும் அதைவிட்ட திகதியும் : ————.

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) : ————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) : ————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

- (i) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் : ————.
- (ii) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் : ————.
- (iii) இளைப்பாற்றிச் சம்பளமுண்டா ? : ————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் : ————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும், பேச்சை மொழி பெயர்க்கும் தேர்ச்சியுண்டா ? :————.
(அ) சிங்களம் : ————.
(ஆ) தமிழ் : ————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டேனில் அவற்றின் முழு விவரங்களையும் திகதிகளுடன் தருக) : ————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக : ————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? : ————.

16. வேறு ஏதும் விவரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) : ————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியதில்லை : ————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முனனர், தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி, வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி ————.

தலைவர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530,
கொழும்பு 1.

உள்ளூர் ஆட்சிச் சேவை

உப-முகாமி பதவி, மாநகரசபை அழுத்தகம், கொழும்பு மாநகரசபை

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினால் வரவேற்கப்படுகின்றன.

2. **வேதன அடிப்படை** :—வருடாந்தம் ரூ. 1,620–9 × 120–ரூ. 2,700, தகமைகளும் அனுபவமும் ஏற்ப உள்ள வேதன அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி அமர்த்தப்படுவார்.

3. **வேண்டிய தகமைகள்** :—(அ) விண்ணப்பதாரர்கள் இலங்கையராகவும் 31.5.1966 ல் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருப்பதுடன் குறைந்தது ஆங்கிலம் ஒரு பாடமாக கனிஷ்ட பாடசாலை தராதரப்பத்திரம் (சிங்களம்) பரீட்சையில் அல்லது அதற்கு சமமான அல்லது உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்திருக்க வேண்டும். பரீட்சார்த்திகள் அழுத்தகத் தொழில் குறைந்தது 10 வருடங்கள் அனுபவமும் பெற்றிருக்கவேண்டும். அதில் 2 வருடங்கள் முகாமியாக, உதவிமுகாமியாக அல்லது "இளிக்கராக" இருந்திருக்க வேண்டும்.

(ஆ) போதிய அனுபவமும், பதவிக்கான ஏனைய தகமைகளும் இருக்கும் பட்சத்தில், அவர்களது கல்வித்தகமைகள் எவ்வாறிருப்பினும், கொழும்பு மாநகரசபை அழுத்தகத்தின் நிரந்தர ஸ்தாபனத்தில் உள்ள சிரேட்ட அச்சுக்கோப்பவர்கள், எந்திரப்பொறுப்பாளி (மெஷீன் மைண்டர்ஸ்)கள், புத்தகம் கட்டுபவர்கள் ஆகியோரிடமிருந்து வரும் விண்ணப்பங்களும் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

4. இவ்வர்த்தமானியின் IV வது பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையில் உள்ள பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் தயார் செயயப்பட்டு 31.5.1966 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட படிவத்தில் உள்ள 7 வது பகுதி பின்வருமாறு திருத்தப்பட வேண்டும்.

(அ) கல்வித் தகமைகள்.

(ஆ) அழுத்தகத் தொழிலில் பெற்ற அனுபவம் பற்றிய விபரங்கள் (வகித்த பதவிகளும் அவற்றின் காலப்பகுதியும் சுட்டிக் காட்டப்படும் முழுச் சேவை வரலாறும் தரப்பட வேண்டும்.)

6. விண்ணப்பங்களும், அவை சம்பந்தமான எல்லா கடிதத் தொடர்புகளும், உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த ஒரு உத்தியாகத்தருக்குமோ நேர்முகமாக முகவரியிடப்படக்கூடாது.

7. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு-1,
6–5–1966.

5–389—13.5.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,695

பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

உள்ளூர் ஆட்சிச் சேவை

உள்ளூர் ஆட்சி எழுதுவினைஞர் சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சை—24.10.1964

30.7.65 இன் இலங்கை அரசாங்க வர்த்தமானியின் IV வது பகுதியில் வெளியான வர்த்தமானி அறிவித்தலின் தொடர்பாக இத்தால் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழ்க்கண்ட பரீட்சார்த்திகளும், உள்ளூர் ஆட்சி எழுதுவினைஞர்கள் சேவைக்கு நியமனம் பெறத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதாகும்.

பிரதேசம் " பி "

	பெயர்		விலாசம்
1.	அலுவிஹார, டி. பி.	..	4ம் இலக்கம், உடவலவ்வ, அலுவிஹார, மாத்தளை
2.	சந்திரசேன, எச். என். டி.	..	வாடிவீடு, ஹங்குரன்கெட்ட
3.	பிரான்ஸிஸ், ரி. பி.	..	பட்டணசபை அலுவலகம், பூண்டுலோயா
4.	ஜயரத்ன, ஈ.	..	பேரலங்கட, தொனியகல
5.	ஜயசிங்ஹ, எஸ்.	..	சன்னங்கம, லோலோபிட்டிய
6.	மஹேந்திரனம, பி. எம்.	..	" மல்சேவன " இந்துலகொடகந்த, குருநாகல் வழியாக
7.	நவரத்தின, எஸ். எல். ஏ.	..	70, நீர்கொழும்பு வீதி, நாரம்மல
8.	பபிலிஸ் அப்பு, எஸ். ஆர். எம்.	..	எக்லீஹியவத்த, தும்மலசூரிய
9.	பிரேமச்சந்திர, கே.	..	அம்பகஸ்தென்ன, கடுகணாவ
10.	செனிவரத்தின, எஸ்.	..	" நத்தன ", வரக்காவ, நாவலப்பிட்டி
11.	சிறிசேன, எஸ். வை.	..	பாதம்புரய, ரம்புக்கனை
12.	சோமதாச, யு. எல்.	..	" சாந்தி ", உடகம, ஆரநாயக
13.	சோமபால, பி. எம்.	..	மேரஹேல, பலாங்கொட
14.	சுகததாஸ, பி.	..	பல்வடிய, இரத்தினபுரி
15.	சுமணதாஸ, எச்.	..	முத்துகல, தம்பதேனிய
16.	சுந்தரமணி, எஸ்.	..	" பாம்கார்டின் ", 43, ரயில் வீதி, யட்டவர, வத்தேகம
17.	விஜேரத்ன, என். எல். எஸ்.	..	நய்யவல, நிவித்திகல
18.	விஜேரத்ன, டபிள்யூ. ஏ. எம். ஆர். எஸ்.		" சாந்தி நிவாஸ் ", மெபலாவ, தெமதலுவ, குருநாகல்

பிரதேசம் " ஏ "

19.	பர்ணாந்து, ஏ. எச். ஜி.	..	25/3, கடற்கரை வீதி, இரத்மலானை

உடனடியாகவே இவர்களுக்கு நியமனங்கள் கொடுக்க அதிகாரசபை கையேற்பதில்லை. வெற்றிடங்கள் வந்தாலும், வரும் பொழுதும் அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

டபிள்யூ. ஏ. விஜேசிங்ஹ,
செயலாளர்,
உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530, கொழும்பு 1,
30.4.1966.

5-361—13.5.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,695

துணை விதிகள்

சுன்னாகம் பட்டின சபை

பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் கீழும், 156 ஆம் பிரிவின் கீழும், சுன்னாகம் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ்த் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு, 17.4.1966.

துணைவிதிகள்

1. இத்துணைவிதிகளில்—

" தலைவர் " என்ற பதம் சபைத் தலைவரைக் குறிக்கும்.
" சபை " என்ற பதம் சுன்னாகம் பட்டின சபையைக் குறிக்கும்.
" பிரதேசம் " என்ற பதம், சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள பிரதேசத்தைக் குறிக்கும்.

2. சுகாதாரத்துறையைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தரின் அல்லது அத்தகைய வைத்திய உத்தியோகத்தரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரின் ஆலோசனையுடன் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட ரகத்திலும் அளவிலும் தானத்திலும் நீரடைப்புக் கட்டுமுறையில் அல்லது வாளி வைத்தெடுக்கும் முறையில் உள்ள ஒரு மலசல கூடத்தை அமைக்கும்படி மலசல கூட வசதி ஏற்படுத்தப்பட்ட பிரதேசத்துள் இருக்கும் ஒருவளவின் சொந்தக்காரருக்கு தலைவர் எழுத்துமூலம் அறிவித்தல் கொடுக்கலாம்.

3. மலசல கூட வசதி ஏற்படுத்தப்பட்ட பிரதேசத்துள் உள்ள ஒரு வளவில், அமைக்கப்பட்டிருக்கும் (இரண்டாந்துணை விதியில் குறிக்கப்பட்ட ரகத்திலும் அளவிலும் நீரடைப்புக் கட்டு முறையில் அல்லது வாளிவைத்தெடுக்கும் முறையில் இல்லாத) ஊத்தைக் குழி அல்லது மலசல கூடம் சுகாதாரத்திற்குக் கேடானதென சுகாதாரத்துறையைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் அல்லது அவரின் அனுமதியைப் பெற்ற ஒருவர் சிபார்சு செய்தால், சபையின் ஆலோசனைப்படி தலைவர், அந்த ஊத்தைக் குழியை அல்லது மலசல கூடத்தை மூடும்படி வளவின் சொந்தக்காரருக்கு, எழுத்துமூலம் அறிவித்தல் கொடுக்கலாம்.

4. இரண்டாந் துணைவிதியின் பிரகாரம் அல்லது மூன்றாந்துணை விதியின் பிரகாரம், அறிவித்தலைப் பெற்ற ஒவ்வொரு சொந்தக்காரரும், அறிவித்தலில் குறிக்கப்பட்டபடி உரிய கால எல்லைக்குள், எப்படியும் இரண்டு மாதகாலத்திற்குள், ஆவன செய்து முடித்தல் வேண்டும்.

5. மலசல கூட வசதி ஏற்படுத்தப்பட்ட பிரதேசத்துள் நீரடைப்புக் கட்டுமுறையில் அல்லது வாளி வைத்து எடுக்கும் முறையில் அமைக்கப்பட்ட மலசல கூடவசதியை உடையவளவின் சொந்தக்காரர், அம்மலசல கூடத்தை சுகாதாரத்திற்கு உகந்த முறையில் பழுதில்லாத நல்ல நிலையில், வைத்திருத்தல் வேண்டும்.

6. மலசல கூட வசதி ஏற்படுத்தப்பட்ட பிரதேசத்துள் உள்ள ஒரு மலசல கூடத்தில், சபை நியமித்துள்ள தொழிலாளர் தவிர்ந்த எவரும் மலம் நீக்கித் துப்பரவு செய்யலாகாது.

7. மலசல கூட வசதி ஏற்படுத்தப்பட்ட பிரதேசத்துள் உள்ளவளவு ஒவ்வொன்றின் சொந்தக்காரர் ஒவ்வொருவரும், வறுமைகாரணமாகச் சபையால் விலக்கப்பட்ட ஒருவர் புறநீங்கலாக, வாளி ஒன்றிற்கு 2 ரூபா என்ற விகிதத்தில் மாதம், மாதம் மலசல கூட வசதிக் கட்டணம் கட்டுதல் வேண்டும்.

8. 7 ம் துணைவிதியில் குறிக்கப்பட்ட மலசல கூட வசதிக்கட்டணம், சபைத் தலைவரிடத்தில் அல்லது இக்கட்டணத்தை வசூலிக்கத் தலைவரிடமிருந்து, எழுத்தில் அங்கீகாரம் பெற்ற ஒருவரிடத்தில், கட்டணம் கொடுக்கப்பட வேண்டிய மாதத்தை உடனடுத்து வரும் மாதத்தில், பத்தாந் திகதியில், அல்லது அதற்குமுன், கட்டப்படல் வேண்டும்.

ஆனால் ஒருவளவின் சொந்தக்காரர் அல்லது அதில குடியிருப்பவர் முற்கூட்டியே சபைத் தலைவருக்கு, எழுத்தில் குறிக்கப்பட்ட ஒரு மாதத்தில், முழுமாதத்திலும், வளவில் தங்கமாட்டேன் என அறிவித்தல் கொடுத்தால், அதனைத் தொடர்ந்து குறிக்கப்பட்ட மாதத்தில், அவ்வளவில் குடியிருக்கவில்லையெனத் தலைவரின் திருப்திக்கு நிரூபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், குறிக்கப்பட்ட மாதத்திற்குக் குறிக்ககப்பட்ட வளவிற்கு மலசலகூட வசதிக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

9. மலசல கூடவசதிச் சேவை சம்பந்தப்பட்ட துணை விதிகளுள் ஏதாவதொன்றையேனும் மீறுபவர், ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத தண்டம் இறுக்கப்பாத்திரராவார். சட்ட அதிகாரமுள்ள ஒரு கோட்டில், மேற்படி மீறுதலிறகுக் குற்றவாளியெனத் தீர்க்கப்பட்ட பின்னும், அல்லது தலைவரால் அல்லது தலைவரின் அதிகாரத்தைப் பெற்ற ஒருவரால் இவ்வித மீறுதல் பற்றி எச்சரிக்கையாக, அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னும், தொடர்ந்து மீறினால், நாளொன்றிற்கு பத்து ரூபா வீதம், மேலதிக தண்டம் இறுக்க ஒருவர் பாத்திரராவார்.

5-360—13.5.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,695

உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

உள்ளூரதிகாரத் தாபனங்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்
(அத்தியாயம் 262)

மாத்தறை மாவட்டம்

அபரெக்க-பம்பரந்த கிராமச் சபை

பன்னிலகே டொன் ஹெந்திரிக் என்பவர் அபரெக்க-பம்பரந்த கிராமச் சபையின் 2 *ம் வட்டாரப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளாரென* (262 *ம் அத்தியாயமான) உள்ளூரதிகாரத் தாபனங்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்* 36 *ம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

ஈ. எவ். டயஸ் அபயசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்)

கொழும்பு, ஏப்றில் 28, 1966.

5-373—13.5.66 *ந் திகதிய வர்த்தமானி இல.* 14,695

வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

அட்டவணை—1966

மாதம்	வெளியீட்டு நாள்		அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதியும் நேரமும்			
மாச்சு	4. 3.66	வெள்ளி	25. 2.66	வெள்ளி	பி.ப.	3.30
	11. 3.66	வெள்ளி	4. 3.66	வெள்ளி	பி.ப.	3.30
	18. 3.66	வெள்ளி	11. 3.66	வெள்ளி	பி.ப.	3.30
	25. 3.66	வெள்ளி	17. 3.66	வியாழன்	பி.ப.	3.30
ஏப்பிறல்	1. 4.66	வெள்ளி	25. 3.66	வெள்ளி	பி.ப.	3.30
	7. 4.66	வியாழன்	31. 3.66	வியாழன்	பி.ப.	3.30
	15. 4.66	வெள்ளி	1. 4.66	வெள்ளி	பி.ப.	3.30
	22. 4.66	வெள்ளி	15. 4.66	வெள்ளி	பி.ப.	3.30
	29. 4.66	வெள்ளி	22. 4.66	வெள்ளி	பி.ப.	3.30
மே	6. 5.66	வெள்ளி	26. 4.66	செவ்வாய்	நண்பகல்	12
	13. 5.66	வெள்ளி	6. 5.66	வெள்ளி	பி.ப.	3.30
	20. 5.66	வெள்ளி	13. 5.66	வெள்ளி	பி.ப.	3.30
	27. 5.66	வெள்ளி	20. 5.66	வெள்ளி	பி.ப.	3.30
யூன்	3. 6.66	வெள்ளி	25. 5.66	புதன்	நண்பகல்	12
	9. 6.66	வியாழன்	1. 6.66	புதன்	நண்பகல்	12
	16. 6.66	வியாழன்	9. 6.66	வியாழன்	நண்பகல்	12
	24. 6.66	வெள்ளி	16. 6.66	வியாழன்	நண்பகல்	12
யூலை	1. 7.66	வெள்ளி	24. 6.66	வெள்ளி	நண்பகல்	12
	8. 7.66	வெள்ளி	1. 7.66	வெள்ளி	நண்பகல்	12
	15. 7.66	வெள்ளி	8. 7.66	வெள்ளி	நண்பகல்	12
	22. 7.66	வெள்ளி	14. 7.66	வியாழன்	பி.ப.	3.30
	29. 7.66	வெள்ளி	22. 7.66	வெள்ளி	பி.ப.	3.30
ஓகத்து	5. 8.66	வெள்ளி	29. 7.66	வெள்ளி	பி.ப.	3.30
	12. 8.66	வெள்ளி	5. 8.66	வெள்ளி	பி.ப.	3.30
	19. 8.66	வெள்ளி	12. 8.66	வெள்ளி	பி.ப.	3.30
	26. 8.66	வெள்ளி	19. 8.66	வெள்ளி	பி.ப.	3.30
செத்தெம்பர்	2. 9.66	வெள்ளி	26. 8.66	வெள்ளி	பி.ப.	3.30
	9. 9.66	வெள்ளி	2. 9.66	வெள்ளி	பி.ப.	3.30
	16. 9.66	வெள்ளி	9. 9.66	வெள்ளி	பி.ப.	3.30
	23. 9.66	வெள்ளி	16. 9.66	வெள்ளி	பி.ப.	3.30
	30. 9.66	வெள்ளி	23. 9.66	வெள்ளி	பி.ப.	3.30
ஒற்றோபர்	7.10.66	வெள்ளி	30. 9.66	வெள்ளி	பி.ப.	3.30
	14.10.66	வெள்ளி	7.10.66	வெள்ளி	பி.ப.	3.30
	20.10.66	வியாழன்	14.10.66	வெள்ளி	பி.ப.	3.30
	27.10.66	வியாழன்	20.10.66	வியாழன்	நண்பகல்	12
நவெம்பர்	3.11.66	வியாழன்	27.10.66	வியாழன்	நண்பகல்	12
	10.11.66	வியாழன்	3.11.66	வியாழன்	நண்பகல்	12
	18.11.66	வெள்ளி	10.11.66	வியாழன்	நண்பகல்	12
	25.11.66	வெள்ளி	18.11.66	வெள்ளி	நண்பகல்	12
திசெம்பர்	2.12.66	வெள்ளி	24.11.66	வியாழன்	பி.ப.	3.30
	9.12.66	வெள்ளி	2.12.66	வெள்ளி	பி.ப.	3.30
	16.12.66	வெள்ளி	8.12.66	வியாழன்	பி.ப.	3.30
	23.12.66	வெள்ளி	16.12.66	வெள்ளி	பி.ப.	3.30
	30.12.66	வெள்ளி	22.12.66	வியாழன்	பி.ப.	3.30

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1966 ம் ௵ பெப்புருவரி ௴ 11 ந் ௳.

பேர்ணாட் த சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.